# இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ஜெயலலிதாவினது அணுகுமுறை (சிவில் யுத்தகாலத்திற்கு முன்னரான, பின்னரான காலப்பகுதியினை அடிப்படையாகக்கொண்ட ஒப்பியலாய்வு)

**க.அருந்தவராஜா[1] சி.மங்களரூபி[2]**

[1,2] வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை

arunn.msu@Gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையில் இடம்பெற்று வருகின்ற இனப்பிரச்சினையானது நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியினைக்கொண்டதென்பதனை எவரும் மறுக்க முடியாது. இத்தகைய இனப்பிரச்சினையானது இலங்கையில் உக்கிரமடைந்த சந்தர்ப்பத்தில் அதனது அயல்நாடான இந்தியாவிலும் இதனது தாக்கமானது பல்வேறு வழிகளில் செல்வாக்கினைச் செலுத்த ஆரம்பித்திருந்தது. அதிலும் குறிப்பாகத் தமிழர்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்ற தமிழ்நாட்டில் இதனது தாக்கமானது சற்று அதிகமாகவே காணப்பட்டது. இதனால் அம்மாநில அரசு நேரடியாகவே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தனது கவனத்தினைச் செலுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. இத்தகையதொரு பின்னணியிலேதான் தமிழகத்தில் ஆட்சியில் அமர்ந்திருந்த முதலமைச்சரர்களிலொருவரான ஜெயலலிதாவும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தனது பார்வையினைச் செலுத்த ஆரம்பித்தார். ஆனால் இத்தகைய இவரது இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான பார்வையானது ஒரு முகப்பார்வையாக அல்லாது இரு முகப்பார்வையாக இருவேறு காலகட்டங்களில் இருந்தமையினை அவதானிக்க முடிகின்றது. ஒன்று இலங்கையில் சிவில் யுத்தமானது நடைபெறுவதற்கு முன்னரான அவரது பார்வை. மற்றையது சிவில் யுத்தம் முடிவடைந்தமையின் பின்னரான பார்வை. இவ்வாறான ஜெயலலிதாவினது இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான பார்வைகள் இரண்டுமே ஒன்றுடன் ஒன்று முரண்பட்டவை. அவ்வகையில் இத்தகைய இவரது இரு முகப்பட்ட பார்வைகளிலொன்று இலங்கைத் தமிழர் சார்பற்றதாகவும் அவர்களது போராட்டங்களுக்கு எதிரானதாகவும் காணப்பட்டது. மற்றையது அவர்களுக்குச் சார்பானதாகவும் அவர்களின் போராட்டங்களுக்கு ஆதரவாகவும் அமைந்திருந்தது. இலங்கைத் தமிழர் விடயம் பொறுத்து அவர் எடுத்திருந்த இத்தகைய நிலைப்பாடானது ஜெயலலிதாவினது அரசியல் இராஜதந்திரத்தினையே உணர்த்தி நிற்கின்றது. இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் ஒப்பீட்டு முறையியல், பகுப்பாய்வு முறையியல் என்பனவற்றின் உதவியுடன் ஆராயப்படுகின்றது. ஜெயலலிதா இலங்கைத் தமிழர் விடயத்தில் சிவில் யுத்தத்திற்கு முன்னராகவும் பின்னராகவும் எடுத்த நடவடிக்கைகள், இதன் மூலமாக அவர் அடைந்த வெற்றிகள், அதனது பிரதிபலிப்புக்கள், தமிழகத்தின் பிற முதலமைச்சர்கள் இவ்விடயமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் போன்றவற்றினை வெளிப்படுத்துவதனை முதன்மையான நோக்கங்களாக இவ்வாய்வானது கொண்டு காணப்படுவதுடன் ஆவணப்படுத்தலென்பதனையும் இது துணை நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆய்வில் நேரடி அவதானிப்புக்கள், வினாக்கொத்துக்கள், சமகாலப் பத்திரிகைகள் போன்றன முதற்தர ஆதாரங்களாகவும் பின்னாளில் தமிழகத்திலும் இலங்கையிலும் வெளிவந்த பத்திரிகைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள், நூல்கள், கட்டுரைகள் என்பன இரண்டாந்தர ஆதாரங்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஜெயலலிதா எப்போதும் அதாவது சிவில் யுத்தத்திற்குப் முன்னராகவும் சரி அதற்குப் பின்னராகவும் சரி உறுதியான கொள்கையினை உடையவராக இருக்கவில்லையென்பதே உண்மை. அவரது இக்கொள்கையானது பெருமளவிற்க மத்திய அரசினையும் தமிழக மக்களையும் அவ்வப்போது திருப்திப்படுத்துகின்ற வகையிலேதான் அமைந்திருந்தது.

**திறவுச்சொற்கள்** : இனப்பிரச்சினை, சிவில் யுத்தம், இராஜதந்திர நகர்வுகள், வெளிப்படையின்மை, சிவில் யுத்தம்

## அறிமுகம்

இலங்கையின் இனப்பிரச்சினையுடன் தொடர்புகொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இதற்கு இந்தியா அதன் அயல்நாடு என்பதனை விடவும் இலங்கையில் இடம்பெற்று வருகின்ற இனப்பிரச்சினையினது ஆழமும் அதனது வேரும் அதற்கு நன்கு தெரியும் என்பதே உண்மை. இந்திய மத்திய அரசானது நீண்டகாலமாக இவ்விடயமாக நடவடிக்கைகளை எடுத்து வந்திருந்தாலும்கூட இலங்கைத் தமிழ் மக்களுடன் தொப்புள் கொடி உறவினைக் கொண்ட தமிழக மக்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அனுதாபம் கொண்டவர்களாகவே எப்போதும் இருந்து வந்துள்ளனர். இலங்கையில் 1980களின் தொடக்கத்திலிருந்து இனப்பிரச்சினை வேகம் பெற்ற பின்னணியில் அகதிகளாகத் தமிழகம் நோக்கி இலங்கைத் தமிழர் சிலர் புலம்பெயர ஆரம்பித்ததுடன் நேரடியாகவே இலங்கையின் அரசியலில் இந்தியா தலையிட ஆரம்பித்தது. அவ்வகையில் தமிழகத்தினது முதல்வர்களிலொருவரான ஜெயலலிதாவும் தனது பதவிக்காலங்கள் ஒவ்வொன்றிலும் இலங்கைத்தமிழர் பிரச்சினையில் தனது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி வந்திருக்கின்றார். (யதீந்திரா,2016டிசம்பர்10) ஆனால் அத்தகைய அவரது நிலைப்பாடுகள் ஒவ்வொரு காலகட்டங்களிலும் ஒவ்வொரு வடிவத்தில் அமைந்திருந்தன. இறுதியாக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர்கூட இலங்கைத் தமிழர்



ISBN 978-955-627-120-1

விடயத்தில் அக்கறை கொண்டிருந்தாரென்பதனை அவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சில தெரியப்படுத்தியிருந்தன. 1991இல் ஜெயலலிதா தமிழகத்தின் முதல்வராக முதன் முதலாகப் பதவியேற்ற காலத்திலிருந்து மேற்குறித்த விடயமாக அவர் எடுத்த நடவடிக்கைகளும் தீர்மானங்களும் அவரது அரசியல் சாணக்கியத்தினது வெளிப்பாட்டினைப் புலப்படுத்தும் வகையிலேதான் அமைந்திருந்தன. குறிப்பாக அவை ஒவ்வொன்றும் தமிழக மக்களைத் திருப்திப்படுத்தித் தனது வாக்கு வங்கியினை நிரப்புகின்ற வகையிலேதான் அமைந்திருந்தன.

**இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஜெயலலிதா**

இலங்கையில் நடைபெற்றுவருகின்ற இனப்பிரச்சினையானது நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியினைக் கொண்டிருந்தபோதும் அதனது துல்லியமான தோற்றப்பாடானது நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னராகவே வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்ததென்பது பொதுவான விடயம். அவ்வகையில் இலங்கையின் இனப்பிரச்சினையானது அடிப்படையில் நூறு வருடங்களை எட்டப்போகின்ற பிரச்சினையாக தொடர்ந்து வருகின்றது. ஆங்கிலேயர் காலத்தில் அவர்களால் திட்டமிடப்பட்டு விதைக்கப்பட்ட இதற்கான விதையானது இன்று பெரும் விருட்சமாக வளர்ந்து தமிழ் - சிங்கள மக்களிடையிலே முரண்பாட்டினைத் தோற்றுவித்துப் பல உயிர் மற்றும் உடமைச் சேதங்களை தற்காலம் வரை ஏற்படுத்தி வந்திருக்கின்றது. இந்நிலையில் நமது நாட்டின் அயற் பிரதேசமான தமிழகத்தினைப் பொறுத்தவரை அதன் மக்களும், அங்கிருந்த பெருமளவிலான அரசியல் சார்ந்த தலைவர்களும் தமிழ் மக்கள் என்ற சகோதர உணர்வுடன் உண்மையான அனுதாபிகளாகவே இலங்கையினது இனப்பிரச்சினையினையும் இலங்கைத்தமிழர் மீதான அடக்குமுறைகளையும் நோக்கினர். பொதுப்பட மத்திய அரசினது நிலைப்பாட்டிலிருந்து தமிழ்நாட்டினது நிலைப்பாடானது இலங்கைத் தமிழர் விவகாரம் பொறுத்துப் பல சந்தர்ப்பங்களில் வேறுபட்டதாகவே இருந்து வந்துள்ளது. இந்திய மத்திய அரசினைப் பொறுத்தவரை அது தன்னைவிட பிறிதொரு அந்நிய சக்தி இலங்கையில் செல்வாக்குச் செலுத்துவதனைத் தனது பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி கருதி ஏற்றுக்கொள்ளாமை அது இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிட்டதற்கான பிரதான காரணங்களிலொன்றாகக் கருதப்படுகின்றது. ஆனால் தமிழக மக்கள் இதய சுத்தியுடன் துணிந்து பல விடயங்களில் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக இலங்கை அரசிற்கு எதிராகக் கண்டனங்களையும் போராட்டங்களையும் தங்களது தேசத்தினையும் தாண்டிச் செய்தனர். செய்தும் வருகின்றனர். இலங்கைத் தமிழர் பிரச்சினையினை ஐ.நா வரை கொண்டு செல்லக் காரணமாக இருந்தவர்கள். சிறை சென்றனர். இதன் பொருட்டு உயிரையும் இழந்தனர்.

இப்பின்னணியில் இலங்கையின் இனப்பிரச்சினையில் எம்.ஜி.ஆர், கருணாநிதியினைத் தொடர்ந்து நேரடியாகத் தன்னைத் தொடர்படுத்திய தமிழக முதல்வராக விளங்கியவர் ஜெயலலிதா. (நேர்காணல்.கணேசலிங்கம்,கே.ரீ) தென்னாசிய வரலாற்றில் இதுவரையும் எந்தவொரு அரசியல் பின்புலமுமினறிப் பெண்ணொருவர் அரசியலுக்குள் நுழைந்து அதனது உச்சத்தினைத் தொட்டது கிடையாது. அப்படி நுழைந்திருந்தாலும்கூட அவரால் அரசியலில் நீடித்து நிலைத்திருப்பதென்பது கடினமே. அதுவும் திருமணமாகாத பெண் என்றால் தென்னாசிய அரசியலில் சொல்லவே தேவையில்லை. (அருந்தவராஜா,க.2017) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிலிருந்து இந்திராகாந்தி, பெனாசீர் பூட்டோ, சந்திரிக்காகுமாரதுங்க, சோனியாகாந்தி போன்றவர்கள் எல்லாமே அரசியலில் பல்வேறு சவால்களைச் சந்தித்து வெற்றி கண்டவர்கள், கண்டுகொண்டிருப்பவர்கள். இது சாதாரண விடயம். ஆனால் அவர்களுக்கெல்லாம் ஏதோ பின்புல வழிகாட்டியொன்று அரசியலில் இருந்தது. ஆனால் ஜெயலலிதாவினைப் பொறுத்தவரை அவரது அரசியல் பிரவேசமும் நடவடிக்கைகளும் சற்று வித்தியாசமானது. சினிமாவிலிருந்த பெண்ணொருவர் அரசியலுக்கு வந்து பெரும்பான்மை மக்களது ஆதரவுடன் அரசியலின் உச்சத்தினைத் தொட்டவரென்றால் அது ஜெயலலிதா ஒருவர்தான் என்பது வெள்ளிடைமலை. எம்.ஜி.ஆரினை அகற்றிவிட்டு எப்படி நவீன தமிழகத்தின் அரசியல் வரலாற்றினை எழுத முடியாதோ அவ்வாறேதான் அவரால் வளர்த்தெடுக்கப்பட்ட ஜெயலலிதாவினையும் புறந்தள்ளிவிட்டுத் தமிழக அரசியல் வரலாற்றினைப் பார்க்க முடியாது.

இருப்பினும் தன்னை எம்.ஜி.ஆருடைய உண்மையான வாரிசாக அடையாளப்படுத்திக்கொண்டு நான்கு தடவைகள் ஆட்சியிலமர்ந்தவர் ஜெயலலிதா. எம்.ஜி.ஆரினது மரணத்தின் பின்னராக இவர் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும், இலங்கைத் தமிழர்களது நலன்கள் பற்றியும் அவரது கொள்கையான இலங்கைத் தமிழர்சார்பு நிலையென்ற கொள்கையினைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. ஜெயலலிதா தன்னை இலங்கைத் தமிழரது அனுதாபியாக பிற்பட்ட காலங்களில் வெளிப்படுத்தி வந்தாலும், சில நடவடிக்கைகளை இலங்கைத் தமிழருக்குச் சார்பாக அவ்வப்போது அவர் எடுத்திருந்தாலும்கூட அவரது அரசியல் இலங்கைத்தமிழரது பிரச்சினையினைப் பொறுத்தவரை சந்தர்ப்பவாத அரசியலே என்பது தெட்டத்தெளிவான உண்மையாகும்.

அதேநேரத்தில் தமிழக மக்களைவிட இவ்விடயமாக இலங்கைத்தமிழ் மக்களில் பலர் ஜெயலலிதாவின்மீது ஏராளமான நம்பிக்கையினை வைத்திருந்தமையினையும் மறுப்பதற்கில்லை. ஆனால் இறுதிவரை அவர் வெறும் பேச்சாளராகவே இருந்து இரு தேசத்துத் தமிழ் மக்களையும் இலங்கைத் தமிழர்பிரச்சினை தொடர்பாகத் தனது பேச்சினால் திருப்திப்படுத்தினாரே தவிர இலங்கையின் இனப்பிரச்சினைப் பொறுத்து இலங்கைத்தமிழ் மக்களுக்கு ஆதரவாக உண்மையான, உறுதியான நடவடிக்கைகள் எவற்றினையும் அவர் ஆட்சியில் இருந்த சந்தர்ப்பத்தில் எடுக்கவில்லை யென்பது



ISBN 978-955-627-120-1

குறிப்பிடத்தக்கது. சில சந்தர்ப்பங்களில் அப்படி எடுக்கப்பட்டிருந்தாலும் அவைகூட அரசியல் பின்னணியொன்றினை அடிப்படையாக வைத்தே எடுக்கப்பட்டவைகளாக இருந்தன.

**சிவில் யுத்த காலத்திற்கு முன்னரான காலப்பகுதியும் ஜெயலலிதாவும்**

ஜெயலலிதாவினைப் பொறுத்தவரை இலங்கையில் சிவில் யுத்தமானது முடிவடைந்த காலப்பகுதியான 2009 ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக ஜெயலலிதா மேற்கொண்ட நடவடிக்கைகளும் சட்டசபையில் அவர் எடுத்த தீர்மானங்கள் சிலவும் அவரை எவ்விடத்திலும் இலங்கைத் தமிழரது அனுதாபியாகக் காட்டவில்லை. அதுமட்டுமன்றி ஏற்கனவே ஒரு இடத்தில் குறிப்பிட்டதனைப் போன்று அவரை எம்.ஜி.ஆரினது அரசியல் வாரிசாக இவ்விடயமாகக் கருதவும் முடியாது. இருப்பினும் எம்.ஜி.ஆரது மரணத்தின் பின்னராக அவருடைய கட்சிக்குத் தலைமையேற்றுச் சிலகால இடைவெளியில் முதல்வாரன ஜெயலலிதாவினால் எம்.ஜி.ஆரினால் ஏழை மக்களது நலன்களைக் கருத்தில் கொண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட பல நல உதவித்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவ்வகையில் தமிழக மக்களில் அனேகர் எம்.ஜி.ஆருடைய மறுவடிவமாகவே ஜெயலிதாவினைப் பார்த்தனர். “அம்மா“ எனவும் “புரட்சித் தலைவி“ யாகவும் இன்றும் அவரைப் போற்றுகின்றனர்.

பொதுப்பட ஜெயலலிதாவினுடைய மறைவினை அடுத்து இலங்கைத் தமிழ் மக்களும், மக்களுடைய தலைவர்கள் சிலரும் பல்வேறு அமைப்புக்களும் நாடு கடந்த இலங்கைத்தமிழ் அமைப்புக்களும், ஆதரவாளர்களும் தங்களது கவலையினை வெளிப்படுத்தியிருந்தனர். வடக்கு மாகாணசபை முழு நாளும் ஒத்தி வைக்கப்பட்டது. கிழக்கு மாகாணசபையிலும் இரங்கல் அறிக்கைகள் வாசிக்கப்பட்டன. ஜெயலலிதாவினது மரண நிகழ்வன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள வியாபார ஸ்தலங்களில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன, பல வியாபார ஸ்தலங்கள் அடைக்கப்பட்டன. இரங்கல் கூட்டங்கள் நடைபெற்றன. இவையெல்லாம் தனது இறுதிக்காலத்தில் மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா தனது நீண்டநாள் கொள்கையினை மாற்றி இலங்கைத்தமிழ் மக்களது பிரச்சினையில் அதிகளவான அக்கறைகொண்டு செயற்பட்டதனால் அவருக்கு கிடைத்த மரியாதையென்றே கூறவேண்டும்.

1991 இல் நடைபெற்ற சட்டமன்றத்திற்கான பொதுத்தேர்தலில் ஜெயலலிதா முதன் முறையாகத் தமிழகத்தின் முதல்வராகத் தெரிவானார். இத்தேர்தலில் வெற்றி பெறுவதன் பொருட்டு அவர் கையாண்ட பிரதான பிரசார அம்சமே “தமிழ்ப் போராளிக் குழுக்களின் மீதான எதிர்ப்பு“ என்பதாக அமைந்தது. அதிலும் குறிப்பாக “புலி எதிர்ப்பு“ என்பது இவரது பிரசாரத்தில் பிரதான இடத்தினை வகித்திருந்தது. (நேர்காணல். மாலைராஜா, முன்னாள் தமிழக சட்டமன்ற உறுப்பினர்) கருணாநிதி காலத்தில் அவரால் இவர்கள் வளர்க்கப்பட்டதாகவும் தான் பதவிக்கு வந்தால் இவர்களை முற்றாகத் தமிழகத்தினைவிட்டு அகற்றப் போவதாகவும் தெரிவித்தே தமிழக மக்களிடம் கணிசமான அளவு வாக்கினைப் பெற்று அத்தேர்தலில் வெற்றி பெற்று தமிழக முதல்வராகியிருந்தார்.

இத்தகைய புலி எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டு நடைபெற்ற சட்டமன்றத்திற்கான பொதுத்தேர்தலில் வெற்றியினைப் பெற்றதுடன் தான் அளித்த வாக்குறுதியினை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளிலும் ஜெயலலிதா இறங்கினார். அன்று அப்படிச் செய்தவர் இன்று எப்படி இலங்கைத் தமிழருக்காக மனம் மாறினாரென்பதும் ஆராயற்பாலது. இலங்கைத் தமிழருக்கு ஆதரவானவரென்றால் அவர்களுக்காக அன்று போராடியவர்களை ஏன் அக்காலப்பகுதியில் இவர் வெறுக்க வேண்டும். இலங்கைத்தமிழருக்காக நன்மை பயக்கின்ற எவ்வித செயற்பாடுகளிலும் அச்சமயத்தில் ஈடுபடாத இவர் 1991 நடைபெற்ற தமிழகச் சட்டமன்றத்திற்கான தேர்தலில் கருணாநிதியினை அகற்றுவதனையே பிரதான இலக்காகக் கொண்டு அச்சமயத்தில் அதற்கான கருவிகளிலொன்றாக இலங்கையின் இனப்பிரச்சினையினைப் பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

ரஜீவ்காந்தியின் மரணத்தின் பின்னரான ஜெயலலிதாவினுடைய முதலாவது ஆட்சிக்காலப்பகுதியில் (1991-96) தமிழகத்தில் இலங்கைத் தமிழருக்கும் அவர்களுக்கு ஆதரவாக நிற்போருக்கும் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. குறிப்பாக இவர் ராஜீவ்காந்தி இறந்த தருணத்தில் இலங்கைத் தமிழர்கள் எல்லோரையும் இந்தியாவிலிருந்து அகற்றுவதற்கான தீவிர முயற்சியில் இறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக மாநாடுகள் மற்றும் கூட்டங்கள் நடாத்தினால் சம்மந்தப்பட்டவர்கள்மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தொடர்ந்து தமிழகத்தினைச் சேர்ந்த பல இலங்கைத் தமிழர் சார்பான அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டுச் சிறைவைக்கப்பட்டனர். புலிகளது ஆயுதக் கலாசாரத்தினால் தமிழ்நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும், பொது ஒழுங்கு இதனால் பாதிக்கப்படுவதாகவும் கருணாநிதியினது ஆட்சிக்காலம் முழுவதும் இவர் அறிக்கைகளை வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

வை.கோபால்சாமி. பழ.நெடுமாறன் போன்றவர்கள்மீது “பொடா சட்டம்“ பாய்ந்தது. இலங்கையிலிருந்து செல்கின்ற அகதிகள்மீது நெருக்குவாரங்கள் கொடுக்கப்பட்டன. சாதாரண தமிழ் மக்கள் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு செல்லுவதற்கான விசா பெறுவதிலும் கட்டுப்பாடுகள் பல காணப்பட்டன. இலங்கைத் தமிழர்களது பிள்ளைகளுக்காகத் தொழிற்கல்லூரிகளில் இருந்தவந்த இடஒதுக்கீட்டினை அகற்றினார். இவர்களது குழந்தைகள் கல்லூரிகள், பள்ளிகளில் சேர்வதனைத் தடைசெய்தார். (உதயன்,2016டிசம்பர்11) உண்மையில் புலிகள் அமைப்பின் தலைவர்தான் அவரது



ISBN 978-955-627-120-1

இலக்கு என்றால் எதற்காக அச்சமயத்தில் தமிழகத்தில் அகதிகளாகச் சென்று தங்கியிருந்த அப்பாவி இலங்கைத்தமிழ் மக்கள்மீதும் இலங்கைத் தமிழ்மக்களது ஆதரவாளர்கள்மீதும் மோசமான நடவடிக்கைகளை மேற்கொண்டாரென்பது புரியவில்லை. அப்படியானால் அச்சமயத்தில் மத்திய அரசினைத் திருப்திப்படுத்தவா இத்தகைய நடவடிக்கைகளையெல்லாம் முன்னெடுத்தார் என்ற கேள்விக்கும் இடமுள்ளது. சிலவேளை அது உண்மையாகவும் இருக்கலாம்.

ஒரு கட்டத்தில் புலிகளைத் தடைசெய்ய வேண்டும் எனவும் அவர்களால் தனது உயிருக்கு ஆபத்து என்றும் கூறியவர். தொடர்ந்து இவ்விடயமாக மத்திய அரசினையும் வலியுறுத்தி வந்தவர். புலிகளை வெறுத்தாரென்றால் பதிலுக்கு அச்சமயத்தில் காணப்பட்ட ஏனைய பேராட்டக்குழுக்களையோ அல்லது இலங்கைத் தமிழரது பற்றாளர்களையோ ஆதரித்தாரா என்றால் அதுவும் இல்லையே. புலிகளுக்குத் தடையும் விதிக்கப்பட்டது. 2002இல் சட்டசபையில் இவரால் இயற்றிய தீர்மானமொன்று புலிகள் அமைப்பின் தலைவர் கைது செய்யப்பட்டு அவர் இந்தியா அழைத்துவரப்பட வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதாவது அதில் அவரை இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடியான நடவடிக்கை எடுக்கச் சட்டப்பேரவை வலியுறுத்துவதாகக் குறிப்பிட்டார். அத்துடன் இலங்கை அரசினால் குறிப்பிட்ட அந்நபரை பிடித்து நாடு கடத்த முடியாதுவிட்டால் இந்திய இராணுவத்தினை உதவிக்கு அனுப்பி அவரைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அரசினை இந்தச் சட்டமன்றம் கேட்டுக்கொள்ளவததாகவும் தீர்மான த்தினை இயற்றினார். ஏற்கனவே இவருடைய அரசியல் குருவான இந்திய இராணுவம் இலங்கை சென்றதனை மறைமுகமாக எதிர்த்தவர் எம்.ஜி.ஆரென்பது இவ்விடத்தில் கவனிக்கத்தக்கது.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில் இலங்கைத்தமிழர் சார்பான போராட்டங்களில் ஈடுபட்ட ப.நெடுமாறன், வை.கோபால்சாமி, பண்டிருட்டி இராமச்சந்திரன், ராமதாஸ், புலமைப்பித்தன் போன்ற பலரைக் கைது செய்து சிறையிலடைத்தார். போராளிக் குழுக்களின் உறுப்பினர்கள் அல்லது அதனது தலைவர்கள், தமிழ் மக்கள் இலங்கையில் இறந்த சந்தர்ப்பங்களில் தமிழகத்தில் இரங்கல் தெரிவித்தவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டவர். இறுதிப்போர் நடைபெற்ற சமயத்தில் “போர் என்றால் மக்கள் சாகத்தான் செய்வார்கள், தமிழர்களைக் கொலை செய்ய வேண்டுமென்று இலங்கை இராணுவம் ஒருபோதும் எண்ணவில்லை. ஒரு யுத்தம் அல்லது போர் நடக்கின்ற சமயத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சாதாரணம்தான்“ என்ற கருத்தினை 2009ஜனவரி17இல் வெளியிட்ட தனது அறிக்கையின் ஊடாகக் கூறிய இவர் 2011 தேர்தலின் பொருட்டுத் தனது கொள்கையினை அப்படியே மாற்றி அதனை இலங்கைத் தமிழ்மக்கள் சார்பானதாகவும் தனிநாட்டுக் கோரிக்கையாகவும் அமைத்தார். இவரது இத்தகைய நடவடிக்கையானது அரசியல்வாதிகள் தொடக்கம் சாதாரண மக்கள்வரை ஆச்சரியப்பட வைத்தது.

ஜெயலலிதாவின் காலப்பகுதிக்குரிய தமிழ்நாட்டுச் சட்டப்பேரவையில் இரு தீர்மானங்கள் இயற்றப்பட்டதாக விமர்சகர் யதீந்தரா கூறுகின்றார். ஒன்று 2002இல் அவரால் இயற்றப்பட்ட தீர்மானத்தில் புலிகளின் தலைவரைத் தூக்கிலிட வேண்டும் என்ற பிரேரணையும் மற்றையது தனிநாட்டுக்காகப் போராடிய அத்தலைவரது கொள்கையான தனிநாட்டுக் கொள்கைக்கு பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்ற ஜெயலலிதாவினுடைய மற்றொரு தீர்மானமும் ஆகும். (யதீந்திரா.2016டிசம்பர்10) இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானது. உண்மையில் இவர் தனிநாட்டுக்கு ஆதரவாளராக இருந்திருந்தால் புலிகளின் இயக்கத் தலைவர் காலத்திலேயே இத்தகை யதொரு முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தினைக் கொண்டுவந்திருக்கலாமே.

ஜெயலலிதாவினைப் பொறுத்தவரை ரஜீவ்காந்தியின் மரணத்தின் பின்னராகவே தமிழ்ப் போராளிக்குழுக்களின் மீது இத்தகைய எண்ணத்தினை அவர் கொண்டிருந்தாரென்றும் கூறமுடியாது. அப்படியானால் எம்.ஜி.ஆரினது இறப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் போராளிக் குழுக்களுக்கும் இலங்கைத்தமிழ் மக்களுக்கும் ஆதரவான எந்தச் செயற்பாடுகளிலும் இவர் ஈடுபடவில்லையே. கருணாநிதியினை நடைபெற்ற உள்ள தேர்தல்களில் வீழ்த்துவதற்கும் காங்கிரஸ்காரர்களைத் திருப்திப்படுத்தவும் இவர் கையாண்ட ஒரு வழியே புலி எதிர்ப்புப் பிரசாரமாகும். எம்.ஜி.ஆருடைய மரணத்தின் பின்னராக கருணாநிதியினது காலத்தில் ஓரளவிற்கு மிதமான போக்கினையே கருணாநிதி இலங்கைத்தமிழர் விடயமாகக் கடைப்பிடித்து வருபவரென்ற எண்ணமும் ஜெயலலிதாவைப் பொறுத்து இவ்விடயமாக மோசமான போக்கினைக் கடைப்பிடித்து வருபவர் என்ற எண்ணமுமே இலங்கைத் தமிழ் மக்களிடம் இருந்தவந்தமை குறிப்பிடத்தக்கது. (அருந்தவராஜா,க.2017)

1995இல் தஞ்சாவூரில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு சென்னை விமானநிலையத்தில் வந்திறங்கிய பேராசிரியர்களான வேலுப்பிள்ளை, சிவத்தம்பி, சண்முகதாஸ் உள்ளிட்ட பல இலங்கையினைச் சேர்ந்த தமிழ்த்துறை சார்ந்தவர்கள் அங்கு வைத்து ஜெயலலிதாவினது அரசினால் திருப்பி அனுப்பப்பட்ட நிகழ்வானது தமிழகத்தின்மீது உலகத் தமிழர்கள் அனைவரையும் ஆத்திரங்கொள்ள வைத்தது. அச்சமயத்தில் தமிழக அரசினது இத்தகைய நடவடிக்கைக்குத் தமிழ்நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சறுத்தல் ஏற்படலாம் என்று காரணங் கூறப்பட்டது.. பொதுவாகவே ஜெயலலிதாவினைப் பொறுத்தவரை அவருக்கு ஆலோசகர்களாக இருந்து அவரை வழிநடாத்தியவர்களில் இலங்கைத் தமிழருக்கும் பேராராட்டக்குழுக்களது நடவடிக்கைகளுக்கும் எதிரான ஊடகங்களும் ஆலோசகர்களுமே என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் தினமலர் போன்ற சில பத்திரிகைகளும் இந்துப் பத்திரிகையின் ஆசிரியரான ராம், துக்ளக் பத்திரிகையின் ஆசிரியர் சோ, சுப்பிரமணியம்சுவாமி போன்றவர்களை இவ்வட்டத்திற்குள் அடக்கலாம். (தேவானந்த்.தே.2016 டிசம்பர்16)



ISBN 978-955-627-120-1

அவ்வகையில் சிவில் யுத்தம் முடிவடைவதற்கு முற்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக ஜெயலலிதா கொண்டிருந்த நிலைப்பாடானது இந்திய மத்திய அரசினைத் திருப்திப்படுத்தும் வகையிலும், தமிழகத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற, சட்டசபை, உள்ளூராட்சித் தேர்தல்களில் தி.மு.கவினைத் தோற்கடிப்பதற்காகவும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே அமைநதிருந்தது. இதனால் இக்குறிக்கப்பட்ட காலப்பகுதியில் இலங்கைத் தமிழ் மக்களால் தமது எதிரியாகவே அவர் பார்க்கப்பட்டிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

**சிவில் யுத்த காலத்திற்கு பின்னரான காலப்பகுதியும் ஜெயலலிதாவும்**

ஜெயலலிதாவினைப் பொறுத்தவரை அவர் அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதிலும் அதனைக் காப்பாற்றுவதிலும் திறமைசாலியாக விளங்கினார். தனது காலத்தில் அதாவது மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக தமிழ்நாட்டினுடைய முன்னணி அரசியல் தலைவராக இருந்தது மட்டுமன்றி இந்தியா முழுவதிலும் செல்வாக்கினைப் பெற்ற ஒருவராகவும் விளங்கியிருந்தார். அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்காகவும் மத்திய அரசினைத் திருப்திப்படுத்துவதற்காகவும் அடிக்கடி இலங்கைத்தமிழர் தொடர்பான அவரது கொள்கையினை மாற்றிவந்தவர். கொள்கையினை மாற்றுவதென்பது அரசியல்வாதிகளுக்குப் பொதுவானதொன்றாயினும் ஜெயலலிதாவினைப் பொறுத்த மட்டில் இலங்கைத்தமிழர் விடயம் பொறுத்து இது அதிகமாகவே காணப்பட்டதெனலாம்.

வன்னி நிலப்பரப்பில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பொருட்டுக் குரல் கொடுப்பதன் மூலமாகத் தனது இலங்கைத் தமிழ் மக்கள் மீதான அனுதாபத்தினை 2009 இன் மத்திய காலப்பகுதியிலிருந்து படிப்படியாக வெளிக்காட்ட ஆரம்பித்தவர் ஜெயலலிதா. இக்காலப்பகுதியில் இவரது நடவடிக்கைகள் யாவும் தமிழ் ஊடகங்களினால் பாராட்டப்பட்டன. தன்னை விடுதலை ஆதரவாளராகவும் இனங்காட்டினார். நெடுமாறன், சீமான், வை.கோபால்சாமி, திருமாவளவன், மணிவண்ணன், அமீர். கொளத்தூர் மணி போன்ற பல நீண்டநாள் இலங்கைத் தமிழர்களின் ஆதரவாளர்களையெல்லாம் விஞ்சியதாக இவரது செயற்பாடுகள் அமைந்தன. இவரது அதிரடியான தீர்மானங்களும் அறிக்கைகளும் நடவடிக்கைகளும் கருணாநிதியினைக்கூட திணறடித்து விட்டது. இதனாலேயே கருணாநிதி இவர் எடுக்கின்ற முடிவுகளுக்கு பின்னால் இழுபடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

ஜெயலலிதா இந்திய இராணுவத்தினை இலங்கைக்கு அனுப்பி இன்னல் பட்டுக்கொண்டிருந்த இலங்கைத்தமிழ் மக்களைக் காப்பாற்றப் போவதாக 2011 நடைபெற உள்ள தேர்தலை குறிவைத்துப் பிரசாரங்ளை மேற்கொண்டு வந்தார். (நேரடி அவதானிப்பு அருந்தவராஜா,க. 2011) இத்தகைய இவரது ஆவேசமான உணர்ச்சி வசப்பட்ட பேச்சின் ஊடாகக் கணிசமானளவு தமிழக மக்களிடமிருந்து வாக்கினையும் இத்தேர்தலில் பெற்றவர். அவ்வாறே 2016இல் தான் பதவிக்கு வருகின்ற சமயத்தில் தமிழகத்தில் வாழ்ந்து வருகின்ற இலங்கைத் தமிழ் மக்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கான முயற்சியில் இறங்கப் போவதாகவும் குறிப்பிட்டவர். வெற்றி பெற்றவர் பின்னர் அவர் உயிருடன் இருந்த குறுகிய காலப்பகுதியில் மத்திய அரசுடன் வெறுமனே கடித அரசியலை இவ்விடயமாக நடத்தினாரே தவிர உறுதியான முடிவு எதனையும் எடுக்கவில்லை. அத்துடன் 1983இன் பின்னராகத் தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்று நீண்டகாலமாகத் தமிழகத்தில் தங்கியிருக்கின்ற இலங்கைத்தமிழருக்கு நிரந்தரமான குடியுரிமையினை வழங்க வேண்டுமெனவும் மத்திய அரசாங்கத்தினை வலியுறுத்தப் போவதாகத் தெரிவித்திருந்தார்.

எந்தளவிற்கு ஜெயலலிதா கொழும்புடன் முரண்பட்டாரோ அந்தளவிற்கு அவர் தமிழகத்திலும் தமிழ் தேசிய சக்திகளினாலும் தமிழகத்தினைச் சேர்ந்த இலங்கைத் தமிழ் மக்களது ஆதரவாளர்களினாலும் சமகாலத்தில் பாராட்டப்பட்டார். இவரது செயற்பாடுகள் பின்னாளில் தமிழ்நாட்டுக்கு உரிய “அம்மா“ என்ற அடையாளம் இலங்கைத் தமிழரிடமும் பிரபலமடைய வேண்டுமென்ற அடிப்படையில் காணப்பட்டது. இவையெல்லாம் கருணாநிதியினைத் தமிழினத் துரோகி என அடையாளப்படுத்தவதனை இலக்காகக் கொண்டிருந்ததென்பதும் அதனூடக 2011 இல் நடைபெற உள்ள சட்டமன்றத்திற்கான தேர்தலில் தனது வாக்கு வங்கியினை நிரப்புவதும் அவரது உள்நோக்கங்களாகக் காணப்பட்டன. ஒரு கட்டத்தில் இந்திய இராணுவத்தினை அனுப்பிப் புலிகள் அமைப்பின் தலைவரைக் கைது செய்யவேண்டுமெனக் கூறியவர் பின்னர் இந்திய இராணுவத்தினை அனுப்பித் தமிழ் மக்களைக் காப்பாற்றப் போவதாகவும் கூறியிருந்தார்.

இலங்கையில் இறுதி யுத்தம் நடைபெற்ற காலத்தில் ஏற்பட்டதாககக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் இலங்கை அரசு மனிதாபிமானச் சட்டத்தினை மீறியமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சம்மந்தமாக ஐக்கிய நாடுகள் சபையினது தீர்மானத்திற்கு இந்தியா அனுசரணை வழங்க வேண்டுமெனக் குரல் கொடுத்தார். அமெரிக்க அரசாங்மானது ஜெனீவாவில் கொண்டுவந்த தீர்மானத்தினை இந்தியா ஆதரிக்க வேண்டுமென டெல்கிக்கு அழுத்தங் கொடுத்தார். இந்திய நாடாளுமன்றக் குழுவினது இலங்கை விஜயத்தினை ஜெயலலிதா பகிஷ்கரித்த சமயத்தில் தி.மு.கவும் தனது நாடாளுமன்ற உறுப்பினர்களின் இலங்கைக்கான விஜயத்தினைப் பகிஷ்கரிப்பதாகக் கூறியது. அதுமட்டுமன்றி ஜெயலலிதா இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்கள் முழு இறையாண்மையுடன் சுதந்திரமாக வாழ்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்குமாறு மத்திய அரசினை இடையிடையே கோரியும் வந்தார். பொதுவாகவே இலங்கைத்தமிழரது பிரச்சினையென்பது தமிழகத்தின் இரு பெரும் கட்சிகளதும் அரசியல் காய் நகர்த்தலுக்கான சாதகமான பாதகமான விடயங்களாக



ISBN 978-955-627-120-1

1980களின் பின்னராக இருந்து வருகின்றமையினை அவதானிக்கலாம். (தனபாலசிங்கம்,வீ. 2016டிசம்பர்11)

இறுதிப்போர் நடைபெற்ற சமயத்தில் இலங்கைத் தமிழருக்குச் சார்பான பல தீர்மானங்களை எடுத்துத் தமிழக மக்களதும், இலங்கைத் தமிழ் மக்களதும் ஆதரவினை ஜெயலலிதா பெற்றிருந்தார். தமிழகச் சட்டமன்றத்தினைக் கூட்டிய இவர் இலங்கை அரசிற்கு எதிராகப் பொருளாதாரத் தடையினை விதிக்க வேண்டுமெனக் கோரினார். 2013இல் சட்டமன்றத்தினைக் கூட்டிய இவர் தனி ஈழத்திற்கான கருத்துக் கணிப்பு வேண்டுமென்ற தீர்மானத்தினையும் எடுத்தார். மேலும் 2013இல் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாதென எதிர்ப்பினை வெளிப்படுத்தியதன் பின்னணியிலேதான் இறுதி நேரத்தில் மன்மோகன்சிங்க் தனது கொழும்பிற்கான பயணத்தினைக் கைவிடவேண்டியதாயிற்று. 2015இல் இலங்கைமீதான ஐக்கிய நாடுகள் சபையினது மனித உரிமைகள் குறித்த தீர்மானத்தினை நீக்குவதற்கு மேற்கொண்ட முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டபோது அதற்கு எதிராக இந்தியா செயற்பட வேண்டுமென்ற தீர்மானத்தினை இயற்றி உலகத் தமிழரனைவரதும் கவனத்தினைத் தனது பக்கம் திருப்பியவர் ஜெயலலிதா. (தினக்குரல்,2016டிசம்பர்10)

பொதுவாகவே ரஜீவ்காந்தியனது மரணத்தின் பின்னராக இலங்கைத்தமிழரது பிரச்சினையில் முழு இந்தியாவினதும் நிலைப்பாடு வேறுவிதமாக அமைந்ததென்ற கருத்துக் காணப்படுகின்றது. அவ்வகையிலேதான் ராஜீவ்காந்தியின் கொலையும் ஜெயலலிதாவினால் கண்டிக்கப்பட்டது. அக்கொலையுடன் தொடர்புபட்டவர்களுக்குத் தக்க தண்டனை வழங்கப்பட வேண்டுமெனவும் வெளிப்படையாகக் கூறிவந்த இவர் சிவில் யுத்தம் முடிவடைந்த பின்னர் 2011இலிருந்து தண்டிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட குற்றவாளிகளது விடுதலைக்கு ஆதரவாகத் தனது கருத்துக்களைக் கூறிவந்தார். மேலும் அவர் அக்கொலையுடன் தொடர்பானவர்களுக்குப் பொதுமன்னிப்பினை வழங்குவதாகத் தெரிவித்ததுடன் அவர்களில் சிலரது உறவினர்களைச் சந்தித்து ஆறுதலும் கூறினார். ஒரு கட்டத்தில் ரஜீவ்காந்தியின் கொலையுடன் தொடர்பட்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டுமெனக் கூறியவர் பின்னாளில் அவர்களுக்குப் பொது மன்னிப்பினையும் வழங்கத் தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

2016இல் நடைபெற்ற தமிழகச் சட்டசபைக்கான தேர்தலைப் பொறுத்தவரை இறுதிவரை கருணாநிதிக்கே வெற்றி வாய்ப்புக்கள் அதிகளவில் இருந்தன. தொடர்ச்சியாகத் தமிழகத்தில் இரு தடவைகள் எம்.ஜி.ஆருக்குப் பின்னதாக எவரும் முதலமைச்சர் பதவிக்கு வந்ததில்லை. அவ்வகையில் பலரதும் எதிர்பார்ப்பு தி.மு.க ஆட்சியினைக் கைப்பற்றும் என்பதே. அத்தகைய வெற்றியானது பாரிய வெற்றியாக அமையாதென்பதனையும் சில கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்திருந்தன. இதனால் அதனை உடைக்கின்ற தேவை ஜெயலலிதாவிற்கு இருந்தது. ஊழல் வழக்குகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கும் இத்தேர்தலில் கட்டயம் வெற்றி பெறவேண்டிய தேவையும் அவருக்கு இருந்தது. இக்கால கட்டத்தில் இலங்கைத்தமிழரது பிரச்சினை முடிவிற்கு வந்தாலும் இலங்கைத்தமிழ் மக்கள் இலங்கை அரசிடம் சில கோரிக்கைகளை முன்வைத்து அஹிம்சைப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இதனால் இலங்கைத் தமிழ் மக்களத நலன்களைக் கருத்தில் கொண்டு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுப்பதனை தமிழக மக்கள் விரும்பியிருந்தனர். எனவே தேர்தலை இலக்காகக் கொண்டு தமிழக மக்களது ஆதரவினைப் பெறச் சில தீர்மானங்களையும் அறிக்கைகளையும் விடவேண்டிய தேவை ஜெயலலிதாவிற்கு இருந்தது. மேலும் போர் நடைபெற்ற சமயத்தில் காங்கிரசுடன் கருணாநிதி இணைந்திருந்தமையினாலும் அச்சமயத்தில் அவர் அழிவுகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டினையும் முன்வைத்த ஜெயலலிதா செய்த பிரசாரம் அவருக்குச் சாதகமான வகையில் இத்தேர்தலில் அமைந்தது. (அருந்தவராஜா,க.2017)

எனவே இக்காலப்பகுதியில் இறுதிப்போரில் மத்திய அரசுடன் சார்ந்திருந்த தி.மு.கவினால் இலங்கையில் ஏற்பட்ட அழிவினைத் தடுக்க முடியவில்லை என்ற விமர்சனங்கள் பரவலாக முன்வைக் கப்பட்டன. அச்சமயத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான கூட்டங்களும் போராட்டங்களும் நடைபெற்று வந்தன. இதனைத் தொடர்ந்து தி.மு.கவின் செல்வாக்குப் படிப்படியாகச் சரிய ஆரம்பித்தது. அதேநேரத்தில் அக்காலப்பகுதியில் தி.மு.கவினது சமாதானத்தினை மக்கள் கேட்கின்ற நிலையிலும் இருக்கவில்லை. இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய ஜெயலலிதா 2011இல் நடைபெற்ற சட்டமன்றத்திற்கான பொதுத்தேர்தலில் கருணாநிதியினை வீழ்த்துவதற்கான முயற்சியில் இறங்கினார். இத்தகையதொரு பின்னணியிலேதான் இவர் ஈரோட்டில் நடைபெற்ற மக்களவைப் பிரசாரக் கூட்டத்தில் தனித்தமிழீழம் அமைய அ.தி.மு.கவிற்கு வாக்களிக்குமாறு மக்களைக் கேட்டார். தனக்குச் சார்பான மத்திய அரசு அமைந்தால் இதனைச் செய்யலாம் எனவும் கூறியதன் பின்னணியில் ஈழ ஆதரவாளர்கள் பலரது ஒத்துழைப்பினை இவர் பெற்றார். கணிசமான அளவிலான வாக்கினையும் பெற்றார். வெற்றியும் அடைந்தார்.

பொதுவே இறுதிப்போர் நடைபெற்ற சமயத்தில் புலிகள் ஜெயலலிதாவினது ஆதரவினைப் பெறுவதற்கான முயற்சியிலும் ஈடுபட்டதாகச் சில தகவல்கள் உள்ளன. இவ்வாறு அவருக்கு புலிகள் அனுப்பிய கடிதங்கள் சிலவற்றினை பதிவு இணயத்தளம் பிரசுரித்திருந்தது. இத்தகைய கடிதங்கள் யாவும் போர் முடிவதற்கு இரண்டு மாதங்கள் முன்பே அனுப்பப்பட்டிருந்தன என்பதும் நோக்கத்தக்கது. (யதீந்திரா,2016டிசம்பர்10) 1991இல் தமிழகத்தில் நடைபெற்ற சட்டசபைக்கான தேர்தலின்போது ஏற்கனவே குறிப்பிட்டதன் பிரகாரம் தேர்தலில் வெற்றியினைப் பெறுவதற்காக ஜெயலலிதா கையாண்ட தந்திரம் புலி எதிர்ப்புடன் இலங்கைத்தமிழ் மக்கள்மீதான கட்டுப்பாடுகளும் என்பதாக இருந்தது. அச்சமயத்தில் ரஜீவ்காந்தியினது இறப்புடன் தமிழக மக்களில் பலரும் ஜெயலலிதா ஆட்சி



ISBN 978-955-627-120-1

அமைப்பதனையே விரும்பியிருந்தனர். இதற்கு மாறாக 2011, 2016 களில் நடைபெற்ற தேர்தலில் புலி ஆதரவு மற்றும் இலங்கைத் தமிழ் மக்கள் அனுதாபம் என்பனவற்றினை முன்னிலைப்படுத்திப் பிரசாரங்கள் செய்து வந்தார். அச்சமயத்தில் இறுதியுத்தத்தின் பின்னராகத் தமிழகத்தில் இலங்கைத் தமிழ்மக்களுக்கு ஆதரவு பெருகியிருந்தமையே இதற்கான காரணமாகும். அவ்வகையில் நாடித்துடிப்பினை அறிந்து அரசியல் நடாத்தியவர் ஜெயலலிதா என்பது புலனாகின்றது. 2002இல் அரசாங்கத்திற்கும் புலிகள் அமைப்பிற்கும் பேச்சுவார்த்ததை நடைபெற்ற சமயங்களில் பிரதமராக அச்சமயத்தில் இருந்த ரணில்விக்கிரமசிங்காவினையும் சந்திரிக்காகுமாரதுங்காவினையும் ஜெயலலிதா சந்தித்தபோதும் இலங்கைத் தமிழ்த் தலைவர்களை இவ்விடயமாகச் சந்திக்கவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதாவிற்கு கடைசி நேரத்தில் ஏற்பட்ட மனமாற்றத்தின் விளைவாக அவர் எடுத்த நடவடிக்கைகளும் தீர்மானங்களும் பாராட்டப்பட வேண்டியவை. அவை அவரது உள்நோக்கம் கருதியதாக இருந்தாலும்கூட தமிழ் இனத்திற்காகப் பேசுவதற்கு தமிழகத்தில் ஒரு தலைவி இருக்கின்றாரென்ற நம்பிக்கையினை எம்மவர் மத்தியில் ஏற்படச் செய்தது. இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே எனச் சட்டசபையில் உரையாற்றியவர். 2105யூன்14இல் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியினைச் சந்தித்து இலங்கை அரசிற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியவர். அவ்வகையில் இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்கடியான சூழலில் தலையிடியினைக் கொடுத்த அரசியல் தலைவியாகவும் ஜெயலலிதா விளங்கியிருந்தார். அவரது மரணம் உறுதியாக நம்பலாம் இலங்கையினது பெரும்பான்மை இனவாதிகள் சிலருக்கு மகிழ்ச்சியினை ஏற்படுத்தியிருக்குமென்று. குறிப்பாக ஜாதிக ஹெலஉறுமயாவின் பேச்சாளர் ஜெயலலிதாவினது மரணந் தொடர்பாகத் தனது கருத்தினைத் தெரிவிக்கின்றபோது “இலங்கையினைப் பாதித்த தலைவலியும் தொல்லையும் ஜெயலலிதாவின் மரணத்தோடு விடுபட்டதனை எண்ணி மகிழ்ச்சியடைகின்றோம்“ என்பதாகக் காணப்பட்டது. (தினக்குரல்2016டிசம்பர்11) அந்தளவிற்கு இவரது இறுதிக்கால நடவடிக்கைகள் இலங்கையின் பெரும்பான்மையின அரசியல்வாதிகள் சிலருக்குப் பாதிப்பினை ஏற்படுத்தியிருந்ததென்பதனை மறுப்பதற்கில்லை. இலங்கை இராணுவத்தினைக் குற்றவாளிகள் என வலியுறுத்தியவர், இலங்கையின் விளையாட்டு வீரர்களைத் தமிழகத்திற்குள் நுழையத் தடைபோட்டவர், சர்வதேச விசாரணைக்கு அழுத்தங் கொடுத்தவர், இவை எல்லாவற்றினையும் விடவும் கச்சதீவினை மீளப் பெறுவதில் உறுதியாக நின்றவர்.

இதில் கவனிக்க வேண்டியமற்றொரு விடயம் யாதெனில் தமிழகத்தின் முதல்வராக ஜெயலலிதா தெரிவானதையிட்டு வடக்குமாகாண முதலமைச்சர் வாழ்த்துத் தெரிவித்து எழுதிய கடித்திற்குப் பதில் கடிதம் எழுதி அனுப்பிய ஜெயலலிதா அதன் மூலமாக இலங்கைத்தமிழ் தலைவர் ஒருவருடன் தொடர்பினை ஏற்படுத்திய முதலாவது சம்பவமாக இதனைப் பதிவு செய்துகொண்டார். அதில் தமிழக மக்களது தொப்புள்கொடி உறவுகளான இலங்கைத் தமிழர்களது நலன்கள் காக்க அவர்கள் உரிய நீதியினைப் பெற என்னால் இயன்ற நடவடிக்கைகளைக் கடந்த 5 வருடங்களாக தமிழக முதலமைச்சரென்ற வகையில் நான் எடுத்துள்ளேன். இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழர்கள் உரிய நீதியினைப் பெற இந்திய அரசின் மூலமாகத் தொடர்ந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் என அதில் கூறப்பட்டிருந்தது. இருவரும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது.

**நிறைவுரை**

ஏறத்தாள 2009வரை இலங்கைத் தமிழருக்காகவும் அவர்களது போராட்ட இலக்கிற்காகவும் சாதகமாகப் பேசாத இவர் 2009இன் நடுப்பகுதியளவிலிருந்து தன்னை ஒரு ஈழ ஆதரவாளராக மாற்றிக்கொண்டார். எனவே இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக அவரது கொள்கையானது இராஜதந்திரத்தினை மையமாகக்கொண்ட முன்னுக்குப் பின் முரணான கொள்கையாக இருந்ததனை அவதானிக்க முடிகின்றது. இது அரசியலில் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக அவர் நிலையான ஒரு கொள்கையினைப் பின்பற்றவில்லையென்பதனையே தெரியப்படுத்துகின்றது. இத்தகைய பின்னாளில் ஏற்பட்ட இவரது மனமாற்றமானது தமிழகத்து மக்களுக்கு மட்டுமன்றி உலகத்தில் வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் எல்லோருக்குமே மகிழ்ச்சியினை அளிப்பதாக அமைந்தது. எது எவ்வாறியினும் அவர் உயிருடன் தற்போது இருந்திருப்பாரேயானால் இலங்கைத் தமிழருக்கு ஒரு அரசியல் பலமாக அமைந்திருக்குமென்பதனையும் இனவாதிகள் சிலருக்கு நெருக்கடியாகவும் இருந்திருக்கும் என்பதனையும் ஏற்றுக்கொள்ளாமலிருக்க முடியாது.

**உசாத்துணைகள்**

அருந்தவராஜா,க.(2017மே), ஜெயலலிதா, கலையிலிருந்து அரசியல்வரை, அஞ்சு வெளியீடு, நல்லூர்.

திருநாவுக்கரசு, மு. (1991மார்கழி), இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள், தமிழ்தாய் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

Goonewardena, Leslie.(1960), A Short History of the LSSP, Colombo.

Wilson,A.J. (1988), The Break - Up of Sri Lanka ; The Sinhalese - Tamil Conflict, University of Hawai Press, London.

5. Vaasanthi, K. ( 2012), Jayalalithaa ; A Portrait, New Delhi : Penguin.



ISBN 978-955-627-120-1

உதயன், நியூ உதயன் பப்ளிகேசன் பிறைவேட் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

தினக்குரல், ஏசியா மீடியா பப்ளிகேசன் பிறைவேட் லிமிட்டெட், யாழ்ப்பாணம்

தினகரன், திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.

தினமணி, திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.

தினமலர், சண் குழுமம், திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.

தினத்தந்தி, திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.

வலம்புரி, வலம்புரி அசோசியேசன் ஸ்தாபனம், யாழ்ப்பாணம்.

3 வீரகேசரி, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு.

11.05.2016இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினது வரலாற்றுத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட "தமிழகச் சட்டமன்றத் தேர்தல் 2016" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் க.அருந்தவராஜாவினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்.

17.012017இல் நடைபெற்ற தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினது கலை கலாசார பீடத்தினது ஐந்தாவது தேசிய கருத்தரங்கில் "தமிழக சட்டசபைத் தேர்தலும் (2016) திராவிட முன்னேற்றக் கழகத்தினது வீழச்சியும்" என்ற தலைப்பில் க.அருந்தவராஜாவினால் வாசிக்கப்பட்ட கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்.

20.12.2016இல் நடைபெற்ற தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினது ஆறாவது சர்வதேச கருத்தரங்கில் "தமிழக அரசியலில் செல்வி ஜெ.ஜெயலலிதாவின் தனிப்பட்ட ஆளுமை" என்ற தலைப்பில் க.அருந்தவராஜாவினால் வாசிக்கப்பட்ட கட்டுரையிலிருந்து பெறப்பட்ட கருத்துக்கள்.



ISBN 978-955-627-120-1